Q.C 138

## DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)

| Name of the Test: | Departmental Test for Members of the Staff of the Tamil Nadu Khadi and Village Industries Board - First Paper on Gandhiji's Collected Works Volume - V (Tamil) (Tamil version only) (Without Books) | 158 |
|---|---|---|

Maximum Time: 2.30 Hour Maximum Marks: 100

## ***IMPORTANT INSTRUCTIONS***

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 100 number of questions in objective Type.
   இந்தக் கணினி வழித் தேர்வானது, 100 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.

2. Answer all questions. Each question carries one mark
   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.

3 In case of doubt, English version is the Final.
   வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
   இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்.

5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
   விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

**a)** One question will be displayed on the screen at a time.
ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

138 OK

1. காந்தியடிகள் எந்த ஆண்டு தாம் முதல் முதலில் தறியில் நெய்ததாக கூறுகிறார்?

(A) 1915 (B) 1920
(C) 1925 (D) 1940

2. சில முஸ்லீம் சகோதரிகளை குஜராத்திலுள்ள எந்த இடத்தில் கண்டுபிடித்தார்?

(A) வீஜாப்பூர் (B) பீஜப்பூர்
(C) அஜ்மீர் (D) மூளசக்தாதபாத்

3. 1917ம் ஆண்டு அக்டோபரில் கோத்ரா என்ற இடத்தில் நடந்த குஜராத் மாகாணராஜ்ய மாநாட்டிற்கு தலைமை வகித்தவர் யார்?

(A) மகாத்மா காந்தி (B) டாக்டர் ராதாகிருஷ்ணன்
(C) ராஜாஜி (D) பண்டித ஜவஹர்லால் நேரு

4. காந்தியடிகள் கதர் இயக்கத்தை எந்த ஆண்டு தொடங்கினார்?

(A) 1947 (B) 1937
(C) 1927 (D) 1918

5. கிராமக் கைத்தொழில்கள் இல்லையானால் இந்திய விவசாயிகள் என்ன ஆவார்கள் என காந்தியடிகள் கூறுகிறார்?

(A) அழிந்து விடுவார்கள் (B) சோம்பேறிகளாவார்கள்
(C) பட்டினியால் சாவார்கள் (D) நகருக்கு போவார்கள்

6. தங்கள் கை ராட்டைகளை எந்த மாநில பெண்கள் அடுப்பெரித்தனர்?

(A) மகாராஷ்டிரா பெண்கள் (B) குஜராத்திப் பெண்கள்
(C) கன்னடப் பெண்கள் (D) ஆந்திரப் பெண்கள்

7. விவசாயத்திற்கு அடுத்தப்படியாக முக்கியமான தொழிலின் மூலம் செல்வம் எல்லோருக்கும் பரவும்படி செய்வது?

(A) சுதேசியம் (B) பசுமை புரட்சி
(C) வெண்மை புரட்சி (D) தொழில் புரட்சி

8. குழந்தைகளுக்கு புனிதமான அதிசய கலாசாரத்தை அளித்து அவர்களை எந்த அழகான ஆடைகளை அணியச் செய்வீர்கள்?

(A) கதர் (B) பட்டு

(C) பாலியஸ்டர் (D) உல்லன்

9. ஔரங்கசீப் தனக்கு வேண்டியவற்றுள் எதை தனக்கு தானே தயாரித்துக் கொண்டார்?

(A) குல்லாய் (B) ஆடை

(C) உணவு (D) காலணி

10. மஸ்லின் புடவை கட்டிக் கொள்வது தமக்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை. கோடையிலும் கதர் புடவை கட்டுவது திருப்தியாக உள்ளது என சொன்னவர் யார்?

(A) சொரூபராணி (B) தேவிஸ்வரூபா

(C) சுந்தர ராணி (D) ஸ்ரீமதி சரளா தேவி சௌத்ராணி

11. இந்தியாவில் கையினால் நூற்பதும் கையினால் நெய்வதும் யாரால் அழிக்கப்பட்டதாக காந்தியடிகள் கூறுகிறார்?

(A) முகலாயர்களால் (B) பிரெஞ்சுகாரர்களால்

(C) கிழக்கிந்திய கம்பெனியால் (D) ஆங்கிலேயர்களால்

12. அஸ்ஸாமில் அநேக வீடுகளில் எந்த நூலை தயார் செய்கிறார்கள்?

(A) கதர் (B) பட்டு

(C) கதர் பாலியஸ்டர் (D) கோரா

13. இந்தியர்கள் இந்தியாவில் இருக்கும் வரையில் கதரை தவிர வேறு எதையும் உடுத்துவதில்லை என்று என்ன முடிவு எடுக்க வேண்டும்?

(A) வைராக்கியம் (B) மன உறுதி

(C) திடமான உறுதி (D) நம்பிக்கையுடன்

14. இந்தியாவுக்கு ராட்டை எதற்கு ஈடாக கூறப்படுகிறது?

(A) கோமாதா (B) எருது

(C) காமதேனு (D) அட்சயபாத்திரம்

15. நாட்டு மக்களுக்கு ஒத்துழைத்திட அரசாங்கத்தையும் மிதவாத நண்பர்களையும் காந்தியடிகள் எதற்கு அழைக்கிறார்?

(A) எல்லோரையும் நூற்கும்படி செய்வதற்கு

(B) கற்கும்படி செய்வதற்கு

(C) விழித்திருக்கச் செய்வதற்கு

(D) போராடுவதற்கு

16. எது நாட்டை ஏழ்மைப்படுத்தியதாக காந்தியடிகள் கூறுகிறார்?

(A) வறுமை

(B) சோம்பல்

(C) நோய்

(D) அறியாமை

17. லோகமான்ய திலகரின் ஞாபகார்த்தமாக பம்பாயில் அன்னியத் துணிகளை பகிஷ்காரம் செய்தது எப்போது?

(A) ஜூலை 31

(B) ஆகஸ்ட் 31

(C) அக்டோபர் 31

(D) டிசம்பர் 31

18. இந்திய பொருளாதார ஒழுக்க விமோசனம் யாரைப் பொறுத்து இருப்பதாக காந்தியடிகள் கூறுகிறார்?

(A) ஆண்கள்

(B) பெண்கள்

(C) குழந்தைகள்

(D) முதியவர்கள்

19. அந்நிய துணி மீது கொண்ட மோகத்தினால் மக்கள் என்ன ஆனார்கள்?

(A) பணக்காரர்களாக

(B) ஏழைகளாக

(C) மானங்கெட்டவர்களாக

(D) ஒட்டாண்டிகளாக

20. என்னளவில் நான் பின்பற்ற தயாராய் இல்லாத எதையும் பிறருக்கு யோசனை சொல்ல நான் என்றும் தயங்கி வந்திருக்கிறேன் – சொன்னது யார்?

(A) பாலகங்காதர திலகர்

(B) கோபால கிருஷ்ண கோகலே

(C) மகாத்மா காந்தியடிகள்

(D) அண்ணாதுரை

21. உண்மையின் அறைகூவல் என்னும் கட்டுரையினை வெளியிட்ட மாதம்/வருடம்?

(A) 1920 அக்டோபர்
(B) 1921 அக்டோபர்
(C) 1921 நவம்பர்
(D) 1921 டிசம்பர்

22. மகாத்மா பாவமான காரியமாக கருதியது எதனை?

(A) அந்நிய துணியை அணிவது
(B) அந்நிய துணிகள் மீது மோகம் கொள்வது
(C) நூற்கும் தொழிலை கைவிட்டு விடுவது
(D) பிறரை கஷ்டப்படுத்தி வேலை வாங்கிய துணியை அணிவது

23. கையினால் நூற்பது விருத்தியாகும் போது எது உண்டாகும்?

(A) செல்வம்
(B) ஏழ்மை
(C) மிகப்பெரிய கூட்டுறவு
(D) சோம்பல்

24. பொருளாதாரப் பிரச்சனையை மிகவும் இயற்கையான எளிதான செலவில்லாத காரியார்த்தமான முறையில் தீர்க்கக்கூடிய பெருமை எதற்கு உண்டு என காந்தியடிகள் கூறுகிறார்?

(A) உழைப்புக்கு
(B) பருத்தி உற்பத்திக்கு
(C) ராட்டைக்கு
(D) மில்துணிகளுக்கு

25. வறுமையிலும் கொடியதான நோய் எது?

(A) பட்டினி
(B) சோம்பல்
(C) வயிற்றுவலி
(D) முதுகுவலி

26. இந்தியாவில் சாந்தி நிகேதன், சபர்மதி ஆசிரமம், சிம்லா, கொடைக்கானல் போன்ற இடங்களில் தங்கியவர் யார்?

(A) ஸ்ரீ ஆண்டுரூஸ்
(B) ரிச்சர்டு பி.கிரக்
(C) டாக்டர் டென்ரிச்
(D) ஸ்ரீ பிரீமன்

27. மிருகங்களிலிருந்து நம்மை வேறாக பிரித்துக் காட்டுவது எது?

(A) அறிவு
(B) கைத்திறன்
(C) சுகாதாரம்
(D) ஏழ்மை

28. பகிஷ்காரம் செய்ய வேண்டிய துணி?

(A) அந்நிய துணி
(B) மில் துணி
(C) கதர் துணி
(D) பாலியஸ்டர்

29. கூட்டுறவு இல்லாமல் நூற்பது வெற்றி பெற முடியாது என்று சொன்னவர் யார்?

(A) அறிஞர் அண்ணா
(B) தந்தை பெரியார்
(C) காந்தியடிகள்
(D) இந்திராகாந்தி

30. கதர் மக்களுக்கு கௌரவமான உழைப்பைத் தருவதால் கதரின் விலையைப் பற்றி காந்தியடிகள் என்ன கூறுகிறார்?

(A) சிந்திக்கக்கூடாது
(B) சிந்திக்க வேண்டும்
(C) ஏற்றுக்கொள்ள வேண்டும்
(D) தவிர்க்க வேண்டும்

31. கோடிக்கணக்கான மக்களுக்கு விளைந்துள்ள பொருளாதாரம் பிரச்சனையை தீர்த்துக் கொள்ளும் சக்தி எந்த நாட்டுக்கு இருப்பதாக காந்தியடிகள் கூறுகிறார்?

(A) பிரான்ஸ்
(B) ஜெர்மனி
(C) இந்தியா
(D) இங்கிலாந்து

32. மனித வர்க்கத்திற்கு ஒரு சாபக்கேடு என்று காந்தியடிகள் எதைக் குறிப்பிடுகிறார்?

(A) இயந்திரமயமாக்கல்
(B) தாராளமயமாக்கல்
(C) மது விற்பனை
(D) சூதாட்டம்

33. ஒழிந்த நேரத்தில் எப்போது வேண்டுமானால் செய்யக்கூடியதாகவும் கற்றுக்கொள்வதற்கு விசேஷ ஆற்றலோ அல்லது பயிற்சியோ தேவையில்லாத தொழில் எது?

(A) உணவு சமைத்தல்
(B) எண்ணெய் வியாபாரம்
(C) கையினால் நூற்பது
(D) பாட்டு பாடுவது

34. கையினால் நூற்பதை எவ்வாறு கருத வேண்டும் என காந்தியடிகள் கூறுகிறார்?

(A) மகிழ்ச்சியாக
(B) தியாகமாக
(C) கடமையாக
(D) தர்மமாக

35. உண்மையான பொருளாதாரப் பரிகாரம் எது என காந்தியடிகள் கூறுகிறார்?

(A) விவசாயம்
(B) மாட்டுப்பண்ணை
(C) கோழிப்பண்ணை
(D) கதர்

36. மக்களுக்கு உடனே கொடுக்கக்கூடிய மிக பயனுள்ள வேலை எது?

(A) கையால் நூற்றல்
(B) தையல் பயிற்சி
(C) எழுத்துப் பயிற்சி
(D) பாய்பின்னும் பயிற்சி

37. அரை மணி நேரம் நூற்றால் குறைந்தது எத்தனை கெஜம் நல்ல நூலைப் பெறலாம்?

(A) 200 கெஜம்
(B) 100 கெஜம்
(C) 50 கெஜம்
(D) 500 கெஜம்

38. கதரை அதிகமாக உற்பத்தி செய்திட மக்களுக்கு என்ன தேவை?

(A) விழிப்புணர்வு
(B) கதர் உணர்ச்சி
(C) இலாப நோக்கு
(D) தரும சிந்தனை

39. மக்கள் தங்கள் குடிசைகளிலேயே கையினால் நூற்பதன் மூலம் கதரை உற்பத்தி செய்வதால் ஏற்படும் நன்மை என்ன?

(A) பாமர மக்களின் பொருளாதார நன்மை
(B) வர்த்தக மேன்மை
(C) அந்நிய துணி பகிஷ்கரிப்பு
(D) சுதேசி வளர்ச்சி

40. விவசாயத்திற்கு அடுத்தபடியான மிகப்பெரிய தொழில் எது?

(A) கட்டுமானத் தொழில்
(B) கருமாரத் தொழில்
(C) மருத்துவத் தொழில்
(D) ஜவுளித் தொழில்

41. சுயராஜ்யம் பெறுவதற்கான சிறந்த சாதனங்கள் யாவை?

(A) கதரும் இராட்டையும்
(B) உணவும் தன்னிறைவும்
(C) வாகன உற்பத்தி
(D) நகர மேம்பாடு

42. இந்தியாவில் உபயோகித்துக் கொள்ள வேண்டிய சக்தி என எதை காந்தியடிகள் கூறுகிறார்?

(A) நீராவி சக்தி
(B) மின்சார சக்தி
(C) ஆயுத சக்தி
(D) வற்றாத மனித சக்தி

43. பட்டினியை பெருமளவு போக்குவதற்கான அபார சக்தி எதில் இருக்கிறது?

(A) கதரில்
(B) மீன்பிடித் தொழிலில்
(C) நெசவுத் தொழிலில்
(D) கருமாரத் தொழிலில்

44. கதர் பொருளாதாரம் எதைப் பொறுத்ததாக இருக்கிறது?

(A) நாட்டின் நன்மையை
(B) பொருளாதார வளத்தை
(C) விவசாய வளர்ச்சியை
(D) மனிதரின் வாழ்க்கையை

45. கதரை மில் துணியுடன் ஒப்பிடுவது எதற்கு நிகரானது?

(A) மனிதரையும் ரோபோவையும்
(B) மாட்டையும் ஆட்டையும்
(C) சிங்கத்தையும் யானையையும்
(D) மனிதனையும் மிருகத்தையும்

46. தேசத்தினிடம் நம்பிக்கை இல்லாமல் போனதால் வர்த்தகர்களுக்கு என்ன ஏற்பட்டது?

(A) திகில்
(B) கோபம்
(C) தோல்வி
(D) வெற்றி

47. கதர் பொருளாதாரத்தின் தத்துவம் என்ன?

(A) இலாபம் பெறுவது
(B) நட்டம் அடைவதை தவிர்ப்பது
(C) நட்டம் அடைவது
(D) எல்லோருக்கும் நியாயம்

48. ஆடம்ஸ்மித் எழுதிய நூல் எது?

(A) தேசங்களின் செல்வம்
(B) தேசங்களின் அழிவு
(C) தேசங்களின் வாழ்வு
(D) தேசங்களின் துரோகம்

49. ஓர் ஏழையால் நூற்கப்பட்ட கதர் நூலில் என்ன உள்ளதாக காந்தியடிகள் கூறுகிறார்?

(A) உயிர்
(B) முறுக்கு
(C) மென்மை
(D) உறுதி

50. கதர் இயக்கத்தில் அதிக ஈடுபாடு உள்ளவர்களை காந்தியடிகள் எவ்வாறு கூறுகிறார்?

(A) காங்கிரஸ்காரர்
(B) கதர்பக்தர்
(C) சாமானியர்
(D) தேசாபிமானி

51. நமக்கான துணியை தயாரிப்பதற்கான பருத்தியை மில்களுக்கு அனுப்பும் செயலை காந்தியடிகள் என்னவென்று கூறுகிறார்?

(A) லாபகரமானது
(B) வெட்ககேடானது
(C) சிக்கனமானது
(D) வழக்கமானது

52. தக்ளிக்கு பதிலாக வந்த நூற்கும் சாதனம் எது?

(A) ராட்டை
(B) தறி
(C) நேபாளி தறி
(D) விசைத்தறி

53. கதரை எல்லோரும் உபயோகிக்கச் செய்வதற்கு பொறுப்பு வாய்ந்தவர்கள் யார்?

(A) கதர் ஊழியர்கள்
(B) அரசு ஊழியர்கள்
(C) வங்கி ஊழியர்கள்
(D) தபால் ஊழியர்கள்

54. பாமரர்களுக்கு செய்யும் சேவை யாது?

(A) தினமும் கோவிலுக்கு போவது
(B) தினமும் பணி செய்வது
(C) பாமரர்களுக்கு மருத்துவம் செய்வது
(D) தினமும் 1/2 மணி நேரம் நூற்பது

55. என் கதிமோட்சத்திற்கு வாசல் என்று காந்தியடிகள் எதை கூறுகிறார்?

(A) சுதந்திரத்தை
(B) தேசிய ஒருமைப்பாட்டை
(C) பக்தியை
(D) இராட்டையை

56. பண்டித சதவலேகர் எந்த ஆண்டு ஹிந்தியில் 'வேதங்களில் ராட்டை' என்ற புத்தகத்தை எழுதினார்?

(A) 1918 (B) 1920

(C) 1922 (D) 1924

57. அகில இந்திய நூற்போர் சங்கம் காலணா, அரையணாவாக இருந்த கூலியை எவ்வளவாக உயர்த்தி வழங்கியது?

(A) ஒரு அணா, இரண்டணா (B) இரண்டணா, மூன்றணா

(C) மூன்றணா, நான்கணா (D) இரண்டணா, இரண்டரையணா

58. காலைப்பனிப்படலம் போன்ற மென்மையான துணியின் பெயர் என்ன?

(A) டாக்கா மஸ்லின் (B) கதர்

(C) பாலிஸ்டர் (D) பட்டு

59. ராட்டையின் மத்தியஸ்தானம் எது?

(A) கிராமங்கள் (B) நகரங்கள்

(C) பெரு நகரங்கள் (D) சிறு நகரங்கள்

60. காந்திஜி எந்த மொழியறிவு அத்தியாவசியமானதாக தோன்றவில்லை என கருதினார்?

(A) வேலை செய்யும் மாகாணத்தின் மொழி

(B) தாய் மொழி

(C) ஆங்கில மொழி

(D) தேசிய மொழி

61. ராட்டைகளே நம் போர் ஆயுதங்கள், நூற்கண்டுகளே தோட்டாக்கள் என கூறியவர் யார்?

(A) மௌலானா முகமது அலி

(B) காந்தியடிகள்

(C) நேரு

(D) ராஜாஜி

62. இந்தியாவின் பொருளாதாரப் பிரச்சனை தீர என்ன செய்ய வேண்டும் என்று காந்தியடிகள் கூறுகிறார்?

(A) கைத்தொழில் செய்ய வேண்டும்

(B) பயிர் செய்ய வேண்டும்

(C) அஹிம்சையுடன் நடக்க வேண்டும்

(D) ஒவ்வொரு வீட்டிலும் ராட்டை இருக்கும்படி செய்ய வேண்டும்

63. ராட்டையை சரியானபடி பராமரித்து வந்தால் நூற்கும் திறன் எவ்வாறு இருக்கும்?

(A) இரு மடங்காகும்

(B) மாற்றம் இருக்காது

(C) மூன்று மடங்காகும்

(D) நான்கு மடங்காகும்

64. இயற்கையான உலகத்தில் ஆன்மீக தருமம் இருக்கிறது என்பதைக் குறித்து இன்னும் காட்டுவேன் எனக் கூறியவர் யார்?

(A) டாக்டர் ராதாகிருஷ்ணன்

(B) சுவாமி ஆனந்தரி

(C) காந்திஜி

(D) அன்னை தெரசா

65. கதரில் எந்த துணி வகைக்கு காந்தியடிகள் அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்றார்?

(A) பருத்திக் கதர்

(B) கம்பளி

(C) கதர் பட்டு

(D) கதர் பாலியஸ்டர்

66. ஆயுதங்கள் ஹிம்சையின் சின்னமாக இருக்கின்றன. ராட்டை எதன் சின்னமாக இருக்கிறது?

(A) அகிம்சையின்

(B) துணியின்

(C) சுதந்திரத்தின்

(D) ஏழையின்

67. மில்களில் தீட்டிய வெள்ளை அரிசி ஆரோக்கியத்திற்கு என்ன செய்யும்?

(A) கேடு செய்யும்

(B) நன்மை செய்யும்

(C) ஊட்டமளிக்கும்

(D) ஊட்டக்குறைவை ஏற்படுத்தும்

68. தக்ளி சரியானபடி பயன்படுத்தப்படுமானால் அது எதற்கு சமமானது?

(A) இயந்திரம்

(B) மின் இயந்திரம்

(C) ராட்டை

(D) நெசவு இயந்திரம்

69. 1944ல் இந்தியாவில் எத்தனை கிராமங்கள் இருந்தன?

(A) இரண்டு இலட்சம்
(B) ஏழு இலட்சம்
(C) மூன்று இலட்சம்
(D) ஒரு இலட்சம்

70. மகாத்மா காந்தியும் கவி ரவீந்திரநாத் டாகூரும் 1921 செப்டம்பரில் எங்கு சந்தித்தார்கள்?

(A) கல்கத்தா
(B) குஜராத்
(C) டில்லி
(D) பம்பாய்

71. கோடிக்கணக்கான மக்களுக்கு அவர்களுடைய குடிசைகளிலேயே கவுரமான வேலையை கொடுப்பது எதற்கு வழியாகிறது?

(A) அவர்களுடைய மகிழ்ச்சிக்கு
(B) அவர்களுடைய வறுமைக்கு
(C) அவர்களுடைய முன்னேற்றத்திற்கு
(D) அவர்களுடைய சோற்றுக்கும் துணிக்கும்

72. நமது தருமத்தை எதைக் கொண்டு பாதுகாக்க காந்தியடிகள் விரும்புகிறார்?

(A) கைத்தொழிலைக் கொண்டு
(B) கதரைக் கொண்டு
(C) மதத்தைக் கொண்டு
(D) ஆன்மீகத்தைக் கொண்டு

73. அன்னபூரணி என்று காந்தியடிகள் எதை குறிப்பிடுகிறார்?

(A) தெய்வத்தை
(B) இந்து மதத்தை
(C) தனது சிநேகிதரின் மகளை
(D) ராட்டையை

74. இயந்திர தொழில்மயமாக்கத்தினை நாட்டின் பொது சொத்தாக்கினால் என்ன நடக்கும்?

(A) முதலாளித்துவத்தின் தீமைகள் அதில் இல்லாதிருக்கும்
(B) நல்ல முன்னேற்றம் ஏற்படும்
(C) உற்பத்தி பெருகும்
(D) மக்கள் உழைக்கமுன்வருவார்கள்

75. எல்லோரும் கதர் அணிந்தால் நாம் செலவழிக்கும் பணத்தில் பெரும்பகுதி யாரை அடைகிறது?

(A) வியாபாரி
(B) நெசவாளி
(C) நூற்போர்
(D) கடை முதலாளி

76. இவர்களும் இரவு பகல் ராட்டையில் வேலை செய்து அதைப்பற்றியே சிந்தித்தும் வராவிட்டால் ராட்டையில் அபிவிருத்தி ஏற்பட்டிருக்க முடியாது?

(A) ஆண்கள்
(B) பெண்கள்
(C) மாணவர்கள்
(D) விவசாயிகள்

77. அடக்கத்திற்கும், அன்புக்கும், தருமத்திற்கும் மிகவும் பொருத்தமான தத்துவம் என்ன?

(A) பாசம்
(B) கடமை
(C) ஆனந்தம்
(D) சுதேசி

78. ஸ்காட்லேண்டின் ஹைலாண்டர்கள் என்னவென்று அழைக்கப்பட்டார்கள்?

(A) முட்டாள்கள்
(B) புத்திசாலிகள்
(C) வேகமான கூட்டம்
(D) பாவாடைப் பட்டாளம்

79. கோடிக்கணக்கான மக்களுக்கு வருமானம் வர உதவியாக இருக்கக்கூடிய ஒரே தொழில்?

(A) விவசாயம்
(B) கையினால் நூற்பது
(C) கனரக தொழில் வளர்ச்சி
(D) பட்டுத்தொழில்

80. சுயராஜ்யத்தின் தைரியம் எதில் பொதிந்திருப்பதாக காந்தியடிகள் கூறுகிறார்?

(A) கைத்தொழிலில்
(B) கைவேலையில்
(C) கையினால் நூற்பதில்
(D) அதிகமாக பேசுவதில்

81. துணி விஷயத்தில் சுதேசியத்தை கைவிட்டதே இதற்குக் காரணமாக அமைந்துவிட்டது?

(A) சுதந்திரத்தை இழப்பதற்கு
(B) மில் துணி உற்பத்திக்கு
(C) துணி தட்டுப்பாட்டிற்கு
(D) பொருளாதார வளர்ச்சிக்கு

82. நாட்டின் முக்கியமான இரு தேவைகள் யாவை?

(A) மின்சாரமும் நீரும்
(B) உணவும் உடையும்
(C) தானியங்களும் காய்கறிகளும்
(D) பணமும் வீடும்

83. இந்தியாவின் பருத்தியை வெளியே அனுப்பி துணி தயாரித்து அதனை கப்பலேற்றிக் கொண்டு வருவதை காந்தியடிகள் என்னவென்று கூறுகிறார்?

(A) புத்திசாலித்தனம்
(B) கெட்டிக்காரத்தனம்
(C) பைத்தியக்காரத்தனம்
(D) வியாபார உத்தி

84. லோகமான்யரின் நினைவை கொண்டாடுவதற்கான தகுதி யாருக்கு உள்ளதாக காந்தியடிகள் கூறுகிறார்?

(A) பம்பாய் மக்கள்
(B) சென்னை மக்கள்
(C) டெல்லி மக்கள்
(D) குஜராத் மக்கள்

85. இந்தியா எதன் மூலம் தன்னைத்தானே புனிதமாக்கிக் கொண்டு உயிர் பெறும் என காந்தியடிகள் கூறுகிறார்?

(A) உற்பத்தி மூலம்
(B) அடக்குமுறை மூலம்
(C) சுதந்திர வேட்கை மூலம்
(D) புலனடக்கம் மற்றும் தன்னலமறுப்பு மூலம்

86. நூற்கும் இராட்டைக்காக எதை ஒப்புக்கொள்ள காந்தியடிகள் கோருகிறார்?

(A) உழைப்புக்குள்ள பெருமையை
(B) வறுமையை
(C) பொருளாதார முன்னேற்றத்தை
(D) தன்னிறைவை

87. பட்டினிகிடக்கும் கோடிக்கணக்கான மக்களின் தேவை யாது?

(A) சத்தளிக்கும் உணவு
(B) கபீர்தாசரின் கீதம்
(C) தூக்கம்
(D) விளையாட்டு

88. ஆண்களும், பெண்களும் தங்கள் குடிசைகளில் இருந்தபடியே எளிதாகச் செய்யக்கூடிய வேலை என்ன?

(A) விவசாயம்
(B) மாடு மேய்ப்பது
(C) தீப்பெட்டி செய்வது
(D) கையினால் நூற்பது

89. ஏழ்மையை போக்கக்கூடியது எது?

(A) ராட்டை
(B) சோம்பல்
(C) அறிவு சீர்திருத்தம்
(D) அறியாமை

90. விவசாயிகள் வருடத்தில் எத்தனை மாதங்கள் வேலையில்லாமல் இருப்பதாக காந்தியடிகள் கூறுகிறார்?

(A) மூன்று மாதங்கள்
(B) இரண்டு மாதங்கள்
(C) நான்கு மாதங்கள்
(D) ஆறு மாதங்கள்

91. மக்களிடையே கூட்டுறவை பெறுவதற்கு எது அதிக சக்தி வாய்ந்த ஆயுதம்?

(A) கையினால் நூற்பது
(B) விவசாயம்
(C) கரும்புத் தொழில்
(D) பால் தொழில்

92. அநேகருக்கு ஆனந்தமாக இருப்பதாக காந்தியடிகள் எதைக் குறிப்பிடுகிறார்?

(A) பேசுவது
(B) எழுதுவது
(C) கையால் இராட்டையில் நூற்பது
(D) ஓவியம் வரைவது

93. கோடிக்கணக்கான மக்களுக்கான ஒரே இரகத் தொழில் எது?

(A) நூற்பது
(B) பானை செய்வது
(C) சலவைத் தொழில்
(D) தோட்டம் செய்வது

94. இந்தியாவும் உலகமும் காக்கப்படுவது எதில் இருக்கிறது என்று காந்தியடிகள் கூறுகிறார்?

(A) ராட்டையில்
(B) விஞ்ஞானத்தில்
(C) கல்வியில்
(D) உணவு பெருக்கத்தில்

95. எளிய தெய்வீகமான வாழ்விலிருந்து பிறக்கும் ரத்தம் சிந்தாத சமாதான வழியிலேயே இந்தியா செல்ல வேண்டும் என கூறியது யார்?

(A) சுப்பிரமணிய பாரதி
(B) அண்ணாதுரை
(C) மோதிலால் நேரு
(D) காந்தியடிகள

96. பயனுள்ள பொருள் உற்பத்தி செய்யும் உடலுழைப்பு தொழில்களை விட்டுவிட்டு அதற்கு பதிலாக ஒரு பயனுமில்லாத உற்பத்தி செய்யாத அதிக பணச்செலவுள்ளதான விளையாட்டுகளையும் தேகப்பயிற்சிகளையும் ஏன் செய்ய வேண்டும் என வினவியவர் யார்?

(A) காந்தியடிகள்
(B) கோபாலகிருஷ்ண கோகலே
(C) தாதாபாய் நௌரோஜி
(D) லால் பகதூர் சாஸ்திரி

97. கிராமவாசிகளுக்கு வேலை தேடி கொடுப்பதற்கான வழி என காந்தியடிகள் குறிப்பிடுவது எதை?

(A) செய்து வந்த கைத்தொழில்களுக்கு புத்துயிர் அளிப்பது
(B) முழு நேரமும் விவசாயம் செய்ய வைப்பது
(C) நகரங்களுக்கு செல்ல வைப்பது
(D) கல்வி அறிவு கொள்ளவைப்பது

98. கையினால் செய்த பொருள்களை வாங்காமல் ஆலைகளில் தயாரான பொருள்களையே வாங்கிக் கொண்டு போவதால் என்ன நிலை ஏற்படும்?

(A) கிராமங்கள் அழிந்து போகும்
(B) நகரங்கள் பெருகும்
(C) உற்பத்தி அதிகரிக்கும்
(D) விவசாயம் நசிந்துவிடும்

99. குடிசைகளில் நம் மக்கள் தயாரிக்கும் துணிகளை நாம் வாங்குவதை காந்தியடிகள் எவ்வாறு குறிப்பிடுகிறார்?

(A) பொது கடமை
(B) தெய்வீக கடமை
(C) கெட்டிக்காரத்தனம்
(D) நல்ல முதலீடு

100. பாட்னாவின் விசேஷ கைத்தொழில்கள் யாவை?

(A) கைநெசவும் விளையாட்டு பொம்மை தயாரித்தலும்
(B) மட்பாண்டம் செய்தல், செருப்பு தயாரித்தல்
(C) சோப்பு செய்தல், பிளாஸ்டிக் தொழில்
(D) பால் தொழில், விவசாயம்